*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 489 / 2018* |
| *Deposition of witness for* | : | *PW : 6* |
| *Name* | : | திரு. ராஜா |
| *Father's / Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* **17.02.2025**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் விராதனூரில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர், 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் வீட்டில் இருந்த போது, அவனியாபுரம் போலிசார் வந்து கையெழுத்து கேட்டார்கள். எதற்கென்று கேட்டேன். போலிசார் வந்ததற்காக கையெழுத்து போடுங்கள் என்று சொன்னார்கள். போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.2, 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.3, அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.4 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 16.04.2014ம் தேதி காலை 06.00 மணிக்கு, நானும் நாகராஜன் என்பவரும் எங்கள் வீட்டின் முன்பு நின்று பேசிக் கொண்டிருந்த போது, அங்கு வந்த அவனியாபுரம் போலிசார், சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதன் விபரம் அறிந்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், பின்னர் அன்றைய தினமே, 14.15 மணிக்கு, 1 வது எதிரியை எங்கள் முன்னிலையில் கைது செய்து, விசாரணை செய்த போது, அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவனியாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அன்றைய தினம், 16.15 மணிக்கு, விராதனூர் சிமெண்ட் செங்கள் கம்பெனி அருகே உள்ள பாலத்திற்கு கீழே இருந்து, எதிரி ஆஜர் செய்த அருவாள் ஒன்றையும், உருட்டு கட்டை மூன்றையும் அவனியாபுரம் போலிசார் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் அதன் விபரங்கள் அறிந்து நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை